Excerpts from:

தினமணி

19-09-2012

# அண்ணாவின் ஆட்சி

(இரா.செழியன்)

ஆண்டுதோறும் செப்டெம்பர் 15 அண்ணாவின் பிறந்த நாள் விழாவாக, தமிழகத்தில் மட்டுமல்லாமல், உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களாலும் கொண்டாடப்படுகிறது.

அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விரிவாக எழுதுமாறு பலர் என்னைக் கேட்டுக்கொள்வது உண்டு. அதில் ஒரு பெரிய சிக்கல் இருக்கிறது. அவருடைய வாழ்க்கை தமிழக அரசியலுடன் இரண்டறக் கலந்நிருக்கிறது. அதனால் அந்த முயற்சி தமிழக அரசியல் வரலாற்றை எழுதுவதாக ஆகும். அந்த முயற்சியில் தற்பொழுது ஈடுபடாமல், கல்லூரிப் படிப்பை முடித்து, 1935இல் பொதுவாழ்வில் சமுதாய நீதிக்கான இயக்கத்தில் ஈடுபட்ட அண்ணா அவர்கள் எவ்வாறு அரசியலில் நேரிடையாக ஈடுபப்டார் அதன் மூலம் அவர் ஏற்ற முதன் மந்திரி ஆட்சிக் காலத்தில் எவை சிறந்தவைகளாக அவருக்கு இருந்தன என்பதைச் சுருக்கமாக இங்கு குறிப்பிட விரும்புகிறேன்,

----------

----------

1967 பொதுத்தேர்தலில் கழகம் மக்கள்சபைக்கு 24 தொகுதிகளில் போட்டியிட்டு அனைத்திலும் வெற்றி பெற்றது. சட்டசபையில் 138 இடங்களைப் பெற்று மாநிலத்தில் ஆட்சி அமைத்தது. அண்ணா மாநில முதலமைச்சராக ஆனார்.

1935இல் பொதுவாழ்வில் ஈடுபட்டபொழுது அவர் வற்புறுத்திய பல்வேறு சமுதாயத் திட்டங்களை, ஆட்சி அதிகாரம் கிடைத்ததும் நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. தமிழ்நாடு பெயர்' 'சீர்திருத்தத் திருமணம்', 'படியரிசி திட்டம்' 'சீரணி' எனப் பலருக்கும் தெரிந்த பட்டியலை இங்கு விரித்துரைக்காமல் ஒன்றை மட்டும் நான் குறிப்பிடுகிறேன்.

1967இல் தமிழ்நாட்டில் பல நகரங்களில் கள்ளச்சாராயம், வார்னீஷ் போன்றவற்றை அருந்தி மாண்டவர்கள் எண்ணிக்கை ஏராளமாக உயர்ந்தது. 21-9-67இல் மது ஒழிப்பிற்கான ஆய்வுக் கூட்டத்தை சென்னையில் கூட்டி, அதில் அண்ணா கூறினார்; 'குடித்துவிட்டு வீட்டில் மனைவி மக்களை தாக்கும் குடிகாரர்களால் அடிபடும் பெண்களின் அழுகுரல் அதிகமாகிறது. அந்த அழுகை ஒலியை என்னால் தாங்கமுடியவில்லை. இனி மதுக்கடை ஒன்றுகூட

திறக்கப்படுவதை நான் அனுமதிக்கமாட்டேன்.” அதற்குப்பின், முழு மதுவிலக்கை அமுலாக்கினார். காங்கிரஸ் மந்திரி சபை இருந்த மாநிலங்களில் மதுவிலக்கைத் தளர்த்தும் காலகட்டத்தில்கூட, “தமிழ்நாட்டில் மதுவிலக்கை தீவிரமாகச் செயல்படுத்துவோம்” என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

ஆந்திராவின் முதலமைச்சர் பிரமானந்தரெட்டி அண்ணாவைப் பாராட்டினார்; “எங்களை விட அண்ணா அவர்கள் உண்மையான காங்கிரஸ்காரராக, காந்திய வாதியாக இருக்கிறார்.”

1968இல் கொடும் நோய்க்கு ஆட்பட்டு அவருடைய வாழ்வும் அவருடைய ஆட்சியும் குறுகிய காலத்தில் முடிவடையாமல் இருந்தன என்றால், சமுதாய நீதிக்கான பல திட்டங்களை சட்டங்கள் மூலம் அண்ணா உறுதியாக நிறைவேற்றியிருப்பார்.

குடியரசுத் தலைவராக பணியாற்றிய ஆர் வெங்கட்டராமன் அவர்கள் ஓய்வு பெற்றதும் டெல்லியில் தங்கியிருந்தார், அங்கு செல்லும்பொழுது அவரைச் சந்திப்பேன், உற்சாகமாக அவர் உரையாடுவார். இருவரும் பட்டுக்கோட்டை வாசிகள். 2005இல் ஒருமுறை அவரை நான் சந்தித்தபொழுது அவர் கூறினார்; “இந்தியாவில் இருவருக்கு ஏற்பட்டட அகால மரணம் நாட்டிற்கு பெரிய இழப்பாகும். ஒருவர் லால்பகதூர் சாஸ்திரி -அவர் நீண்டகாலம் பிரதமராக நீடித்திருந்தால், இந்தியா நேர்மையான நாடாக வளர்ந்திருக்கும். அண்ணா அவர்கள் 59 வயதிலேயே இறக்காமல் தொடர்ந்து முதலமைச்சராக வாழ்ந்திருந்தால், இந்தியாவின் கூட்டாட்சி முறை லுப்பெற்றிருக்கும்.”

மாற்றாரும் மதித்துப் போற்றிய அண்ணா மக்கள் நலன் ஒன்றையே மனதில் கொண்டு ஆட்சி நடத்தினார்.